உங்களின் வேட்பாளராக கலைஞர்தான் நிற்கிறார்:

“நீங்கள் அவரை டெல்லிக்கு அனுப்பப் போகிறீர்கள்”!

கோவையில் சமூக வலைத்தள தன்னார்வலர்கள் சந்திப்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

கோவை,மார்ச்.2-

கோவையில் தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுடன் சமூக வலைத்தள தன்னார்வலர்களுடனான சந்திப்பு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

அப்போது, ``தலைவர் யாரை வேட்பாளராக அறிவித்தாலும் நீங்கள் மனதில் நினைத்துக் கொள்ள வேண்டியது, கோயம்புத்தூரில் நிற்கிற உங்களின் வேட்பாளராக டாக்டர் கலைஞர்தான் நிற்கிறார் என்பதைத்தான். நீங்கள் கலைஞருக் காகத் தேர்தல் வேலை பார்த்து அவரை டெல்லிக்கு அனுப்பப் போகிறீர்கள்’ என்று அவர் குறிப்பிட்டார்.

கோவையில் மாவட்ட சமூக வலைத்தள தன்னார்வலர்களைச் சந்தித்துப் பேசுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சமூக வலைத்தள தன்னார்வலர்களில் இந்த கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் மிகவும் சிறப்பாகச் செயலாற்றி வந்து கொண்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். இன்னும் சொல்லப் போனால் இதற்கு முன்பு இருந்த அடிமை ஆட்சியின் போது சமூக வலைதளங்களில் கழகத்துக்கு ஆதரவாக, முழு வீச்சாகப் பதிவுகள் போட்டதில் ஏராளமான வழக்குகளையும், அடக்குமுறைகளையும் சந்தித்தது இந்த கோவை மண்டலம் தான்.

இந்த மாவட்டத்தில் முன்னாள் அ.தி.மு.க அமைச்சர் இருந்தார். நீங்கள் தினமும் என்ன செய்கிறீர்கள். என்ன பதிவு போடுகிறீர்கள். காலையில் எழுந்தவுடன் என்ன பதிவு போடப் போகிறீர்கள் என்று உன்னிப்பாக உங்களையெல்லாம் கூர்ந்து பார்த்துக்கொண்டே இருந்தார். அந்தளவுக்கு அவரைத் தொடர்ந்து ஒரு பதற்றத்திலேயே வைத்திருந்தீர்கள்.

உங்களை நான் பல்வேறு தருணங்களில் சந்தித்துப் பேசியிருக்கிறேன். இருந்தாலும் இப்போது இன்றைக்கு சந்திப்பது மிகவும், முக்கியமான ஒரு தருணம். இந்த நேரத்தில் சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டை இணையதளம் மூலமாக, சமூக வலைதளம் மூலமாக மக்களிடம் கொண்டு சேர்த்த உங்கள் எல்லாருக்கும் என்னுடைய அன்பையும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் உங்கள் அணியின் செயலாளர் கூட அப்போது இல்லை. அணியின் செயலாளர் வெளிநாட்டில் இருந்தாலும் தொடர்ந்து எங்களோடு தொடர்பு கொண்டு எங்கள் அணி எப்படி பணியாற்ற வேண்டும் ஏதாவது குறை இருக்கிறதா என்று தொடர்ந்து தொலைபேசியின் மூலமாக நம் இளைஞர் அணி மாநாட்டுக்காக உங்களையெல்லாம் இயக்கிக் கொண்டிருந்தார்.

கத்தி முனையை விட பேனாவின் முனை கூர்மையானது!

ஒரு காலத்தில் Pen is Mightier Than Sword என்று சொல்வார்கள். கத்தி முனையை விட பேனாவின் முனை கூர்மையானது என்று சொல்வார்கள். ஆனால் இன்றைக்கு அப்படிச் சொல்ல முடியாது. கத்தி முனை, பேனா முனை, ஏன் துப்பாக்கி முனையை விட சமூக வலைதளங்கள், உங்களுடைய செல்போன்கள் மிகவும் கூர்மையான ஆயுதங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு அரசியல் களத்தில் தீர்மானிக்கப்படுவதைவிட சமூக வலைதளங்களில் தான் தினமும் என்ன விஷயத்தைப் பற்றி பேச வேண்டும், என்ன வகையான ‘நேரேட்டிவ்’ செய்ய வேண்டும் என்பதை எல்லாம் சமூக வலைதளங்கள் தான் தீர்மானிக்கின்றன. ஃபேஸ்புக், எக்ஸ், இன்ஸ்டாகிராம், யூடியூப் மாதிரியான சமூக வலைதளங்களில் ஒரு போஸ்ட் அல்லது ஒரு வீடியோ போட்டால் மில்லியன் கணக்கான மக்களை நாம் எல்லாம் ஒரே நொடியில் போய் சேர்த்து விடுவோம்.

நம் திராவிட இயக்கமே எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கம்தான். நம் இயக்கத்துக்கு அது தான் அடித்தளம். அதை உணர்ந்துதான் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ‘மாணவ நேசன்’ என்ற பத்திரிக்கையை கையெழுத்துப் பிரதியாக ஆரம்பித்தார். கையெழுத்துப் பிரதி என்றால் 50 பிரதி, 100 பிரதிகளுக்கு அவரே எழுதுவார்கள். அந்த நூறு பிரதிக்கும் தலைவர் கலைஞர் அவர்களே கார்ட்டூன் வரைவார்கள், அவரே அதை மக்களிடம் கொண்டு சேர்த்தார்.

ஆனால் இன்றைக்கு நிலைமை அப்படி இல்லை. நம்மிடம் ‘கன்டென்ட்’ ஏராளமாக இருக்கிறது. பெரியார், அண்ணா, கலைஞர், நம் தலைவர் அவர்கள் பேசிய, எழுதிய விஷயங்களே நம்மிடம் ‘கன்டென்ட்’ ஆக இருக்கின்றன. சோசியல் மீடியாவில் ஒரு பட்டனை தட்டினால் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான பேருக்குப் போய்ச் சேரும் அளவுக்கு தொழில்நுட்பம் இப்போது வளர்ந்திருக்கிறது.

இன்றைக்குப் பல மீடியாக்கள் ஒன்றிய பா.ஜ.க அரசிடம் விலை போய்விட்டார்கள். மீடியாக்கள் எல்லாம் இப்போது அவர்கள்தான் இயக்குகிறார்கள். அவர்கள் பேசத் தயங்குகின்ற பேசப் பயப்படுற பல விஷயங்கள் சமூக வலைதளங்களில் பேசுவது நீங்கள் மட்டும்தான்.

பல நாடுகளில் ஆட்சி மாற்றங்களுக்கே சமூக வலைதளங்கள் காரணமாக இருந்திருக்கிறது. அவ்வளவு ஏன் தமிழ்நாட்டில் ஆறு வருடத்துக்கு முன்பு ஒன்றிய பா.ஜ.க அரசையும் மோடியையும் ஆட்டங்கான சேர்ந்த ஜல்லிக்கட்டுப் போராட்டம் கூட சமூக வலைதளங்கள் மூலமாக ஆரம்பித்த

ஒரு போராட்டம் தான். அடிமைகளை 2021ல் வீட்டுக்கு அனுப்பினோம். அதில் உங்கள் மாதிரியான சமூக வலைதள தன்னார்வலர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

இப்போது இருக்கிற இளைஞர்கள் மட்டுமில்லை, வயதானவர்கள் கூட டிஜிட்டல் மீடியாவில்தான் செய்திகளைப் பார்க்கிறார்கள். எனவே ஊடகங்கள் செய்கிற அந்தப் பொறுப்பான வேலை சமூக ஊடங்கள் உங்கள் கைகளில் வந்து சேர்ந்திருக்கிறது. அந்த வேலையைப் பொறுப்பாகவும், கடமை உணர்வோடும் நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்றைக்கு நம் எதிரிகள் நமக்கு என்ன பேசணும் அப்படின்னு தெரியாமல் பொய்ச் செய்திகளைப் பரப்புகிறார்கள்.

பொய்ச் செய்திகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று ‘மிஸ் இன்ஃபர்மேஷன்’, இன்னொன்று ‘டிஸ் இன்ஃபர்மேஷன்’. ‘மிஸ் இன்ஃபர்மேஷன்’ என்பது தெரியாமலேயே பொய்ச் செய்திகளைப் பரப்புவது. ‘டிஸ் இன்ஃபர்மேஷன்’ என்பது திட்டமிட்டு தெரிந்து பொய்ச் செய்தியைப் பரப்புவது. இன்னிக்கு அந்த இரண்டுமே எதிர்த்துத்தான் நாம் அனைவரும் சண்டை போட வேண்டியதாக இருக்கிறது.

சிஸ்டமேட்டிக்காக பொய்ச் செய்திகளைப் பரப்புகிற ஒரே கட்சி என்றால் உலகத்திலேயே அது ஒன்றிய பா.ஜ.க கட்சிதான். பொய்ச் செய்திகளை உருவாக்குவது மட்டுமல்ல, அதைப் பரப்புவதற்கும் ‘ஃபேக் நியூஸ்’ நிபுணர்களை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் நாமெல்லாம் ‘உண்மை சரிபார்ப்பு’ எனும் ‘ஃபேக்ட் செக்கிங்’ குழு உருவாக்குகிறோம்.

உங்களுக்குத் தெரியும், சில மாதங்களுக்கு முன்பு ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு பேசினேன். என்ன பேசினேன். ‘பிறப்பால் அனைவரும் சமம். எந்த ஏற்றத் தாழ்வும் இருக்கக் கூடாது’ என்று பேசினேன். பேசி முடித்துவிட்டு மேடையில் இருந்து இறங்குவதற்குள் அதைப் பொய்ச் செய்தியாகப் பரப்பி ஒரு ‘இனப்படுகொலைக்கு நான் அழைப்பு விடுத்தேன்’ என்று சொல்லி, பாரத பிரதமரிலிருந்து இங்கு இருக்கக்கூடிய உள்ளூர் கட்சிக்காரன் வரைக்கும் பொய்ச் செய்தியாகப் பரப்பினார்கள்.

அது தொடர்பான வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தின் மீது எனக்கு ஓரளவுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஒன்றிய பிரதமர், வெள்ளம் வந்தால் வரமாட்டார். புயல் வந்தால் தமிழ்நாட்டுப் பக்கமே தலை வைத்தே படுக்கமாட்டார். ஆனால் தேர்தல் வந்தால் வாரத்துக்கு இரண்டு முறை வந்துவிட்டு, வந்துவிட்டுப் போவார். அப்படித்தான் இரண்டு நாட்கள் தமிழ்நாட்டில் சுற்றுலா வந்து போயிருக்கிறார். விதவிதமான வடைகள் எல்லாம் சுட்டுவிட்டுப் போயிருக்கிறார்.

பொய் இல்லை, என்றால் பா.ஜ.க இல்லை. முழுக்க முழுக்கப் பொய்களை மட்டும் சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கக் கூடிய கட்சியை எதிர்த்துத்தான் நாம் களத்தில் போராடிக் கொண்டிருக்கிறோம். தினமும் தூங்கி எழுந்தவுடன் இன்றைக்கு என்ன பொய்ச் செய்தி பரப்பலாம் என்றுதான் ஒன்றிய பா.ஜ.க அரசு நினைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இந்தப் பகுதி பல்லடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மோடி அவர்கள் தமிழ்நாட்டில் ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்று கூறியிருக்கிறார். அவர் சொல்வதற்கு முன் என்ன தெரியுமா செய்திருக்கிறார். மேடையில் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாரின் படத்துக்குப் பூத்தூவி ‘அம்மாவின் ஆட்சி சிறந்த ஆட்சி’ என்று சொல்லிவிட்டு இதைப் பேசி இருக்கிறார்.

அவருக்குத் தெரியாதா? உச்ச நீதிமன்றத்தால் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு அந்த அம்மா உள்ளே சென்று வந்தவர்கள். ஒருமுறை இல்லை பலமுறை உள்ளே போய்விட்டு வந்தவர் தான் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார். இப்படி ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட ஒருவரின் படத்துக்குப் பூவைப் போட்டுவிட்டு ஊழலை ஒழிக்கப் புறப்பட்ட ஒரே பிரதமர் இவர் மட்டும்தான்.

சரி ஊழலை ஒழிக்க வேண்டும் என்று சொல்கிறாரே இவரின் கிட்டத்தட்ட 10 வருட ஆட்சியில் எவ்வளவு பெரிய ஊழல் நடந்திருக்கிறது. இதை நான் சொல்லவில்லை சி.ஏ.ஜி அறிக்கை. கடந்த 9 வருடத்தில் மட்டும் ஆறு மாதத்துக்கு முன்பு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இந்த சி.ஏ.ஜி அமைப்பின் வேலை என்ன, ஒன்றிய அரசு மாநில அரசு செய்கின்ற வரவு செலவு கணக்குகளைத் தணிக்கை செய்வது. அதை ஆடிட் செய்து அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்தார்கள்.

அந்த அறிக்கையின் படி, ஒன்றிய அரசு செலவு செய்த ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்குக் கணக்கே இல்லை. ஏழரை லட்சம் கோடி ரூபாய் எங்கே போனது என்று யாருக்குமே தெரியவில்லை. ‘துவாரகா சாலை’ என்ற ஒரு திட்டம். ரோடு போடுகின்ற திட்டம். ஒரு கிலோமீட்டர் ரோடு போடுவதற்கு ஒன்றிய பா.ஜ.க அரசு எவ்வளவு தெரியுமா செலவு செய்திருக்கிறது? 250 கோடி ரூபாய்.

அதேபோல் ‘ஆயுஷ்மான் பாரத்’ என்ற ஒரு திட்டம் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு இன்சூரன்ஸ் பதிவு செய்திருக்கிறார்கள். திருநெல்வேலி கூட்டத்துக்குச் சென்று மோடி இன்னொன்றையும் பேசியிருக்கிறார். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தையே அழிக்கப் போகிறாராம். 1949 இல் இருந்து இதே வசனத்தைப் பேசி பலபேர் அழிந்து போய் இருக்கிறார்களே தவிர தி.மு.க.வை ஒரு கொம்பனாலும் அழிக்க முடியாது.

கலைஞர் சொன்னதைத்தான், நம் தலைவர் சொன்னதைத்தான் நானும் சொல்கிறேன். தி.மு.கவை ஒரு கொம்பனும் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது. ‘தமிழ்நாட்டில் குடும்ப ஆட்சி நடக்கிறது’ என்று மோடி சொல்கிறார். ஆமாம் தமிழ்நாட்டில் நடப்பது எங்களின் குடும்ப ஆட்சி தான். தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். எங்களின் முதலமைச்சர் கொடுக்கிற ஒவ்வொரு திட்டமும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பயனாளி இருக்கிற அளவுக்கு எங்கள் முதலமைச்சர், திட்டங்களைத் தீட்டி வருகிறார்.

பொய் சொல்வது, அடுத்த கட்சியில் இருந்து தலைவர்களை கடத்துவது ஆகியவைதான் அவர்களின் முழுநேர வேலை. கூவத்தூரில் நடந்த நிகழ்ச்சி எல்லாம் உங்களுக்குத் தெரியும். அது தொடர்பாக, இப்போது வேறு என்னவெல்லாமோ விஷயங்கள் வெளியே வருகின்றன. ஆனால், கூவத்தூர் சம்பவத்தின் போது செய்தித்தாள்கள், தொலைக்காட்சிகளில் நேரடியாகப் பார்த்தோம்.

ஓர் எம்.எல்.ஏ சுவர் ஏறி குதித்து ஓடினார். ஓர் எம்.எல்.ஏ ஓடுற பஸ்ஸிலிருந்து இறங்கி ஓடினார். எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், `அவர் இப்போது அடிக்கடி கால் வலி, முட்டி வலி’ என்று அடிக்கடி சொல்கிறார். ‘நான் ஒன்றும் மக்களைச் சந்தித்து எல்லாம் முதலமைச்சராகவில்லை. நான் தவழ்ந்து சென்று முதலமைச்சராகிவிட்டேன்’ என்று அவரே சொல்லிவிட்டார்.

நம்மை எதிர்த்து நிறைய பொய்ச் செய்திகள்!

இப்போது நம் தலைவர் அடிக்கடி ‘திரு.எடப்பாடி பழனிச்சாமி’ என்று கூப்பிடுவது இல்லை. ‘திரு.பாதம் தாங்கி பழனிச்சாமி’ என்றுதான் அவருக்கு ஒரு செல்லப் பெயர் வைத்திருக்கிறார். இப்படியெல்லாம் செய்தால், நம் மக்கள் நம்பி வாக்களிப்பார்கள் என்று நினைக்கிறார்கள். அது தமிழ்நாட்டில் ஒருபோதும் நடக்காது. முன்பெல்லாம் உங்களுக்கு ஒரு சின்னக் கவலை இருந்தது. அதை ஒரு புகாராகவே நீங்கள் சொல்வீர்கள். நம்மை எதிர்த்து நிறைய பொய்ச் செய்திகள் போடுகிறார்கள், அவதூறுகள் பரப்புகிறார்கள், அதற்கு நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

இப்போது அந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். கோவையில் கூட இரண்டு மூன்று பேர் உள்ளே சென்று வந்திருக்கிறார்கள். உண்மையான விமர்சனங்களை ஏற்றுக் கொள்வோம். நம்மைத் திருத்திக் கொள்வோம். உள்நோக்கத்தோடு வருகிற பொய்யை எந்நாளும் நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். மறுப்போம். இன்றைக்கு அடிமைகளும் பாசிஸ்டுகளும் சேர்ந்து அடிக்கிற கூத்துகளுக்கு ஒரு அளவே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது.

அதுவும் இந்த கோயம்புத்தூரில்தான் அந்தக் கூத்தும் நடந்து கொண்டிருக்கிறது. நேற்று முன் தினம் இங்கு ஒரு அ.தி.மு.க தலைவர் சொல்கிறார். ‘இரண்டே கால் மணிக்குள் இரண்டு பா.ஜ.க எம்.எல்.ஏ.க்களைத் தூக்குகிறோம்’ என்று. போட்டிக்கு பா.ஜ.க தலைவர்கள் மீட்டிங் போட்டு ‘நான்கு மணிக்குள் நான்கு அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வரப்போகிறார்கள்’ என்று அவர்கள் சொல்கிறார்கள்.

ரொம்ப ரகசியமாக வைத்திருக்கிறார்கள்!

இதை எல்லாம் பார்த்து, ‘அதை ரொம்ப ரகசியமாக வைத்திருக்கிறார்கள். அதை யாரிடமும் சொல்ல மாட்டோம் என்கிறார்கள். கடைசி நிமிடத்தில்தான் சர்ப்ரைஸ் என்று சொல்கிறார்கள். அந்த இரண்டு அ.தி.மு.க எம்.எல்.ஏ.க்கள் ஓ.பன்னீர் செல்வமாகவும், எடப்பாடி பழனிச்சாமியாகவும் இருக்கலாம்’ என்று நான் நகைச்சுவையாகச் சொன்னேன்.

எதற்கு இரண்டு பேரும் இப்படி மாற்றி மாற்றி சொல்லிக் கொண்டிருப்பது எதற்கு. நீங்கள் இரண்டு பேருமே ஒன்றுதானே. தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்த வரைக்கும் அ.தி.மு.க.வும் ஒன்றுதான், பா.ஜ.க.வும் ஒன்றுதான். ‘பா.ஜ.க.வின் ‘மாநில டீம்’ தான் அ.தி.மு.க.; அ.தி.மு.கவின் ‘தேசிய டீம்’தான் பா.ஜ.க’ என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்து வைத்திருக்கிறார்கள்.

இவ்வளவு நாள் கூட்டணியில் இருந்துவிட்டு இப்போது தேர்தல் வந்தவுடன் ‘பிரிந்து விட்டோம்’ என்று நாடகம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன். அ.தி.மு.க ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அப்போது பன்வரிலால் புரோகித் என்று ஒரு ஆளுநர் இருந்தார். அவர் இதே போல ‘ரிவ்யூ’ பண்ணப் போகிறேன் என்று சொல்லிக் கிளம்பிவிட்டார். அது அவருடைய வேலையே கிடையாது.

‘ஆட்டுக்குத் தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையே இல்லை’

ஆளுநர் என்பவர் வெறும் ரப்பர் ஸ்டாம்ப், அவ்வளவுதான். அவர் ஒரு தபால்காரர். நம் அரசு என்ன சொல்கிறதோ அதை டெல்லியில் சென்று சொல்லிவிட்டு வருபவர்தான். பேரறிஞர் அண்ணா ஏற்கெனவே சொல்லி இருக்கிறார், ‘ஆட்டுக்குத் தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையே இல்லை’ என்று.

அப்போது யாருமே வாயைத் திறக்கவில்லை. தி.மு.க தான் அப்போதும் மாநில உரிமைக்காக அ.தி.மு.க ஆட்சியிலும் போராடியது.

இப்போது கூட்டணியைவிட்டு வெளியே வந்து விட்டீர்களே. சென்ற முறை சட்டமன்றத் தேர்தலில் ஆளுநர் உரையின்போது ஆளுநர் எப்படி எழுந்து ஓடிவிட்டார். ஒவ்வொரு முறையும் வருவார் எழுந்து ஓடிவிடுவார். இந்த முறை எதற்கு ஓடிப் போனார். ‘தேசிய கீதம் பாட வேண்டும், தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடக்கூடாது’ என்று சொன்னார். நான் இப்போது சொல்கிறேன். எங்களுக்கு தேசிய கீதமும் முக்கியம், தமிழ்த் தாய் வாழ்த்தும் முக்கியம். அதனால்தான் இப்போது தொடர்ந்து நம் அரசு நிகழ்ச்சிகள் மட்டுமில்லாமல், நம் கழக நிகழ்ச்சிகளிலும் முதலில் தமிழ்த் தாய் வாழ்த்தைப் பாடிவிட்டுத்தான் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தொடங்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

கோடிக் கணக்கான நலத்திட்ட உதவிகள்!

இப்போது நான் கேட்கிறேன். வெள்ளம் வந்தது இவ்வளவு பாதிப்பு ஏற்பட்டது முதலமைச்சர் பல நலத்திட்ட உதவிகளைக் கொடுத்தாரே? பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் 6 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள். தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் கோடிக் கணக்கான நலத்திட்ட உதவிகளை அறிவித்தார்கள். ஒன்றிய அமைச்சரிடம் கேட்டோம் முதலமைச்சர் என்ற முறையில் கேட்டார். இவ்வளவு பெரிய பாதிப்பு வந்திருக்கிறது. ஒரு வருடம் செய்ய வேண்டிய மழை ஒரே நாளில் கொட்டி இருக்கிறது. நாங்கள் நிதி கொடுத்திருக்கிறோம். மாநிலப் பேரிடர் நிதியைக் கொடுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசிடம் கேட்டார். அதற்கு அமைச்சர் நிர்மலா சீதாராமன் என்ன சொன்னார்கள். ‘நாங்கள் என்ன ஏ.டி.எம் மெஷினா?’ என்று கேட்டார்கள். அதற்கு நான் என்ன சொன்னேன். ‘நான் என்ன உங்கள் அப்பன் வீட்டு காசையா கேட்டேன்’ என்று சொன்னேன். அதில் ஏதாவது தவறு இருக்கிறதா? அந்த அம்மாவுக்குப் பயங்கரமாக கோபம் வந்துவிட்டது. டெல்லியில் பத்திரிக்கையாளர்களை எல்லாம் சந்தித்து கிட்டத்தட்ட அரை மணி நேரம் எனக்கு வகுப்பு எடுத்தார்கள். ‘உதயநிதி இப்படி எல்லாம் பேசக்கூடாது. மரியாதையாகப் பேச வேண்டும்’ என்று வகுப்படுத்தார்கள்.

வடமாநிலத்தவர் எழுதலாம் என்று அனுமதித்ததும் அ.தி.மு.க அரசுதான்!

நான் உடனே அடுத்த நாள் திருத்திக் கொண்டேன். ‘அம்மா ஒன்றிய நிதி அமைச்சர் அம்மா அவர்களே, மரியாதைக்குரிய உங்கள் அப்பா வீட்டுக் காசை நாங்கள் கேட்கவில்லை. எங்களின் தமிழ்நாட்டு மக்கள் கட்டி இருக்கக்கூடிய வரிப் பணத்தைத்தான் கேட்டோம்’ என்று சொன்னேன். நீங்கள் கேட்ட மரியாதையை நான் கொடுத்துவிட்டேன். நாங்கள் கேட்ட நிதி இது இது வரைக்கும் ஒரு காசு கூட உங்கள் ஒன்றிய அரசு எங்களுக்கு கொடுக்கவே இல்லை.

இருந்தாலும் நம் முதலமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் சரியாக கொடுத்துக் கொண்டிருக்கிறார். பா.ஜ.க.வோடு கூட்டணியில் இருக்கும் போது அ.தி.மு.க., சி.ஐ.ஏ சட்டத்தில் கையெழுத்துப் போட்டது, உதய் மின் திட்டத்தை அனுமதித்தது, ‘நீட்’ தேர்வை அனுமதித்தது. மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருந்த வரைக்கும் அவர்கள் ‘நீட்’டை அனுமதிக்கவில்லை. ஆனால் அந்த அம்மா இறந்து போன பிறகு இங்கிருந்த அந்த அடிமைக் கூட்டம் பா.ஜ.க.வின் வற்புறுத்தலால் நீட்டை தமிழ்நாட்டுக்குள் நுழைத்தது. அதேபோல் டி.என்.பி.எஸ்.சி தேர்வை வடமாநிலத்தவர் எழுதலாம் என்று அனுமதித்ததும் அன்றைய அ.தி.மு.க அரசுதான்.

இவ்வளவு துரோகங்களையும் செய்துவிட்டு இப்போது திடீரென்று தேர்தல் வந்தவுடன் உரிமையை மீட்கப் போகிறோம் என்று மோடியைப் போலவே அவர்களும் ஒரு வடையைச் சுடுகிறார்கள். இதையெல்லாம் நீங்கள் சமூக ஊடகங்களில் அம்பலப்படுத்த வேண்டும். நம் கழக அரசின் சாதனைகளை மக்களிடம் தொடர்ந்து பேச வேண்டும். யாராவது உங்களிடம் வந்து நம் அரசைப் பற்றி குறை பேசினார்கள் என்றால் உங்களுக்குக் கிடைக்கிற வாய்ப்புகளின் போதெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டே இருங்கள். ஏனென்றால், மக்களுக்கு மறதி அதிகம்.

நம் தலைவர் கடும் நிதி நெருக்கடியிலும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறார். தேர்தல் வாக்குறுதியில் சொன்ன ஒவ்வொன்றையும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார். ஒரு ஐந்து திட்டங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஐந்து திட்டங்களை மக்களிடம் அடிக்கடி பேசிக் கொண்டே இருங்கள்!

மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதித் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கல்லூரி மாணவிகளுக்குப் புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம் ஆகிய ஐந்து திட்டங்களை மக்களிடம் அடிக்கடி பேசிக் கொண்டே இருங்கள்.

இதையெல்லாம் பதிவாக நீங்கள் போடவேண்டும். சிறு சிறு வீடியோக்களைப் பதிவு செய்து போடவேண்டும். செல்போன் வைத்திருக்கிற ஒவ்வொருவரும் இப்போது செய்தியாளர்கள் தான். நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு யூடியூப் சேனல்களைத் தொடங்கி, கழகத்துக்காக, தமிழ்நாட்டுக்காக, மக்கள் நலனுக்காக நீங்கள் பேச வேண்டும். தேர்தலுக்கு இன்னும் 50, 60 நாட்கள்தான் இருக்கிறது. தேர்தல் தேதி இன்னும் ஐந்து அல்லது ஆறு நாட்களில் அறிவித்துவிடுவார்கள்.

இவை மிக மிக முக்கியமான நாட்கள். நீங்கள் அத்தனை பேரும் துடிப்போடு சமூக வலைதளத்தில் இறங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னொரு முறை பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் மாநிலங்களே இருக்காது. தேர்தலே நடக்காது. இன்னும் சொல்லப்போனால் சமூக வலைதளங்கள் கூட இருக்குமா என்று தெரியவில்லை.

பா.ஜ.க நினைப்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். ‘ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே உடை’ என்று அனைத்தையும் ஒன்றாக ஆக்கப் பார்க்கிறார்கள். ஒரே கட்சிதான் இருக்க வேண்டும் என்பது அவர்களின் இலக்கு. அடுத்த முறை வெற்றி பெற்றுவிட்டால் அதை நோக்கி அவர்கள் பயணிப்பார்கள். அந்த அபாயத்தை எல்லாம் உணர்ந்து சமூக வலைதளங்களில் நீங்கள் சிறப்போடு செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மக்களும் தயாராக இருக்கிறார்கள்!

சென்ற முறை கோவையில் நாடாளுமன்றத் தேர்தலின்போது ஒரு லட்சத்து 79 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் நம் கூட்டணி வெற்றி பெற்றது. கோவை மக்கள் நம் கூட்டணியை வெற்றி பெறச் செய்தார்கள். இந்த முறை அதைவிட மிகப் பெரிய வெற்றியை நாம் கோவையில் பெற வேண்டும். சட்டமன்றத் தேர்தலில் இருந்த மாதிரி கோட்டை விடக்கூடாது. யார் வேட்பாளர், தொகுதிப் பங்கீடு இதையெல்லாம் தலைவர் பார்த்துக் கொள்வார். சரியான வேட்பாளரை மக்கள் வரவேற்கக் கூடிய வேட்பாளரை உங்களின் அன்பையும் ஆதரவையும் பெற்ற வேட்பாளர்களை தலைவர் அவர்கள் அறிவிப்பார்கள்.

மக்களும் தயாராக இருக்கிறார்கள். நம் கட்சிக்காரர்களுக்கு உள்ளே தான், நம் தலைவர்களுக்கு உள்ளே தான் சின்ன சின்ன மனக்கசப்புகள் எல்லாம் இருக்கும். அவை ஒவ்வொரு இயக்கத்திலும் இருக்கத்தான் செய்யும். அது இருந்தால்தான் கட்சியே வளரும் என்பார்கள். எந்தப் பிரச்சனையும் இல்லாத இயக்கம் என்று எதுவுமே கிடையாது. பிரச்சினை இருப்பது ஒரு வகையில் ஆரோக்கியமான விஷயம்தான்.

எனவே தலைவர் அவர்கள் ஒரு நல்ல வேட்பாளரை உங்களிடத்தில் ஒப்படைப்பார். நான் உங்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். தலைவர் யாரை வேட்பாளராக அறிவித்தாலும் நீங்கள் மனதில் நினைத்துக் கொள்ள வேண்டியது, கோயம்புத்தூரில் நிற்கிற உங்களின் வேட்பாளராக டாக்டர் கலைஞர்தான் நிற்கிறார் என்பதைத்தான். நீங்கள் கலைஞருக்காகத் தேர்தல் வேலை பார்த்து அவரை டெல்லிக்கு அனுப்பப் போகிறீர்கள்.

நம் தலைவர், யாரை முடிவு செய்கிறார்களோ, தமிழ்நாட்டு மக்கள் யாரை தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்தான் அடுத்த ஒன்றிய பிரதமராக அமர வேண்டும் என்றால், 40க்கு 40 தொகுதி நாம் வெற்றி பெற்றாக வேண்டும். அது உங்கள் கைகளில் தான் இருக்கிறது.

இந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் உங்களை மீண்டும் சந்திக்கிற வாய்ப்பு இருக்கிறது. 2021ல் அடிமைகளை விரட்டி தமிழ்நாட்டுக்கு விடியலைத் தந்தது நம் தலைவர் அவர்கள். அதேபோல் இப்போது அடிமைகளின் முதலாளியையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய நேரம். சென்ற தேர்தலின் போது ‘கோ பேக் மோடி’ என்று ஹேஷ்டேக் போட்டீர்கள். உலகெங்கும் பரவியது. இந்த முறை, ‘கெட் அவுட் மோடி’ என்று